திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, இருக்கின்ற கிணறுகளை ஆழப் படுத்துவதைவிட, தூரத்திலிருந்து பைப் லைன்மூலமாகத் தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதி செய்துகொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பைப் லைன் போடுவது என்பது வேறு. புதிதாக கிணறுகளை வெட்டுவதற்குத்தான் இப்பொழுது பயன்படுத்தி வருகி றோம்.

விவசாயிகள் கூலி நிர்ணயச்சட்டம்

* 516 வினா—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கீழ்த் தஞ்சை மாவட்டத்திற்கு நிர்ணயம் செய்துள்ள விவசாய கூலி சட்டத்தை மேல் தஞ்சைக்கும் விரிவுபடுத்துகிற செயற்குறிப்பு அரசு பரிசீலனை யிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, ஒரே மாவட்டத்தில் வேலை யின்தரம் ஒன்றாக இருக்கும்பொழுது கீழ்த்தஞ்சையிலே ஒரு கூலி நிர்ணயம், மேலத்தஞ்சையிலே வேறுவிதம் என்று இல்லாமல் மேல தஞ்சைக்கும் அந்தக் கூலி நிர்ணயத்தை விரிவுபடுத்தினால் அங்குள்ள மக்கள் பயன் பெறுவார்கள் என்பதால் உடனடியாக அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் குறிப்பிடுவது சரியல்ல. மேலத்தஞ்சைக்கும், கீழத்தஞ்சைக்கும் கூலியிலும், உழவர்கள் நிலை யிலும் வித்தியாசம் இருப்பதாக கணபதியா பிள்ளை குழு தெரிவித்திருக்கிறது, அதன்பேரிலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசின் பேரிலும் தான் அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது. மற்றைய பகுதிகளுக்கும் இதை விஸதரிப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன் னேன்.

திரு. அ. தேவந்திரன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நடவுக் கூலியைச் செயல்படுத்தும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்போது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, மேலத்தஞ்சை மாவட்டத்லே கீழத்தஞ்சையைவிட குறைவாக கூலியிருப்பதால் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படு கிறது. அதிகாரிகள் சொல்லி சமரசம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதை உத்தேசித்து கீழ்த்தஞ்சையைப் போலவே மேலத் தஞ்சையிலும் கூலி நிர்ணயச் சட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, என்னுடைய குறிப் புப்படி இப்பொழுது அங்கே தகராறு இல்லாமல் இருக்கிறது என்றுதான் தெரிகிறது. மேற்கொண்டும் தகராறுகள் இல்லாமல் அமைதியாக இருக்க மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உதவ வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, நாட்டினுடைய அடிப்படைத் தொழில் உழவுத்தொழில். அந்தத் தொழிலுக்கு மிகக்குறைந்த கூலியிருக்கிறது. எனவே இந்தக் கூலிச் சட்டத்தையாவது தமிழகம் பூராவிற்கும் விஸ்தரிக்க நம் அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்சமயம் இல்லை.

Smuggling of wheat

* 517 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is smuggling of wheat from our State to other neighbouring States; and

(*b*) if so, the action taken by this Government to curb the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) 1969-ஆம் ஆண்டு மண்டலங்களுக்கிடையில் கோதுமை—கோதுமைப் பொருட்கள் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மைசூர், கேரள மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியாகிய புதுச்சேரி ஆகியவற்றுக்குள் கோதுமையையும், கோதுமைப் பொருட்களையும் அனுப்புவதில் கட்டுப்பாடு எதுவும் இல்லை. எனவே, அவ்வாறு கோதுமையை அனுப்புவது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை.

DR. H. V. HANDE: In general will it be possible for this Government to prevent smuggling of foodstuffs like rice from this State to the neighbouring States? Even recently in Pattabiram one Station Master and one Deputy Station Master were arrested. Will it be possible for the Government to give instructions to the Railways people also to see that whenever wagons are loaded, immediately information is given to the Government, so that the Government can immediately intervene and take necessary action. Even with regard to broken rice this took place and two persons, I understand, are kept under suspension May I know whether it is possible for the Government to keep a vigilance and watch over these things and take immediate action?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுபோன்ற வழக்கு சம்பந்தமாக 4 மாதங்களுக்கு முன்பு நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் குறிப்பிட்டிருக்கிறேன். அது தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது வெளிமாநிலங்களுக்கு அரிசி அனுப்பக்கூடாது என்ற தடையிருப்பதால் எல்லா இரயில்வே அதிகாரிகளுக்கும் எந்தக் காரணத்தைக்கொண்டும் ரயில்வே வேகன்களில் அரிசியை ஏற்றக்கூடாது என்று தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்றுவதில்லை என்ற தகவலைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஏனவே, அப்படிப்பட்ட தகவல் ஏதேனும் கிடைத்தால் அங்கத்தினர் தெரிவிக்கலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சதர்ன் பகுதிகளில் கோதுமைப் பொருட்களை அனுப்புவதில் எந்தவிதமான தடையும் இல்லை என்று கூறினார்கள். பஞ்சம் வந்த நேரத்தில் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில்